



# மரம்

வெட்ட வெட்ட தளைக்கும்

மரம்: 01 இலை: 01 07.11.2015 ஹிஜ்ரி 1437 முஹர்ரம் பிறை 24 பக்கங்கள்: 12 விலை: 20/=


# உள்ளூராட்சித் தேர்தலை இழுத்தடிக்காதீர்கள்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம்

(நமது செய்தியாளர்)

புதிய எல்லை நிர்ணயம் போன்ற விடயங்கள் தாமதமாகுமானால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை இழுத்தடிக்காமல் தற்போது நடைமுறையிலுள்ளவாறு தேர்தலை நடத்துவதே சிறந்ததென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெடுப்புகள் குறித்து அது தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் உறுப்பினர்களில் ஒருவரான முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் ஆழமானவை.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் எல்லை மீள்நிர்ணயம் வட்டார மற்றும், விகிதாசார அடிப்படையில் முறையே 70-30 என்ற விகிதத்தில் நடைபெறுமென உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் பைசர் முஸ்தபா கூறிவருகிறார்.

இதில் இன்னும் முழுமையான இணக்கப்பாடு இல்லாத நிலையில், அமைச்சரவை உபகுழு கூட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர் கபீர் ஹாஷிமும், மலை யகக் கட்சிகளை பிரதிநி தித்துவப்படுத்தும் வகையில் அமைச்சர் மனோ கணேசனும், முஸ்லிம் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவும் கலந்து கொண்டனர்.

கடந்த செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் கூடிய போது, எதிர்வரும் 21ஆம் திகதி வரை பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் வட்டார எல்லை நிர்ணயம் சம்பந்தமான ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நியமித்திருக்கின்ற குழுவினரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கான இறுதித் தினமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தேவை ஏற்படும் பட்சத்தில் 24ஆம் திகதியன்று அமைச்சரவை உபகுழு மீண்டும் கூடி ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பாக இருக்கும் பாரபட்சமான தீர்மானம் குறித்தும், தமது பக்க நியாயங்கள் குறித்தும் கருத்துகளை முன்வைப்பதற்காக சாட்சியமளிப்பதற்கு என்று முக்கியமான பிரதேச அமைப்பா ளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படவிருப்பதாக அறியவருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரீ.ஹஸனலி, கட்சியின் எல்லா அமைப்பாளர்களிடமிருந்தும் தத்தமது பிரதேசங்களில் எல்லை நிர்ணயம் சம்பந்தமாக இருக்கும் ஆட்சேபனைகளயும், அபிப்பிராயங்களையும் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கோரியிருக்கிறார்.

ஏற்கனவே உத்தியோகபூர்வ எல்லை நிர்ணயக்குழு தயாரித்த வரைபடங்களையும், வட்டார எல்லைகள் குறித்த விபரங்கள் அடங்கிய விபரக்கோவைகளையும் அவ்வப் பிரதேசங்களின் அமைப்ப ளர்களும், அரசியல் பிரதிநிதிகளும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கட்சிகளுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

>>>> 08

## இலங்கை – இஸ்ரேல் உறவும்

# நல்லாட்சி அரசாங்கமும்

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்து வருகின்ற ராஜதந்திர உறவை மீண்டும் பலப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அண்மையில் இலங்கை வந்த இஸ்ரேலிய பாராளுமன்ற தூதுக் குழுவொன்று பாராளுமன்றத்திற்கும் சென்றுள்ளமை இதனை உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

>>> 03

## முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில் மலாய் காங்கிரஸ் அலுவலகம் திறப்பு

உலக மலாய் அமைப்பின் தலைவரும், மலாக்காவின் முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய செனட்டரும், ஆளும் உம்னோ கட்சியின் பிரதித் தலைவருமான முஹம்மது அலி ருஸ்டாம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் அங்கமான மலாய் காங்கிரஸின் அலுவலகத்தை கட்சியின் தலைவர்,

>>> 08

## இஸ்லாமிய வரையறைக்குள்

# அரசியலில் பெண்கள்

இலங்கையின் அரசியல் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் அன்று இந்நாட்டில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கென உரிமைகளும், சலுகைகளும் உரிய முறையில் வழங்கப்படாது அநாதைகளாகவே கருதப்பட்டனர்.

காலப்போக்கில் முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முன்னோர்களான எமது தலைவர்கள் பலர் குரலெழுப்பினர்.

>>> 04

## பொறுப்புக்கள் பற்றி

# மறுமையில் விசாரணை உண்டு

**– அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். புழீல் (நளீமி) –**

தலைமையகம் தாருஸ்ஸலாமில் மாதமிருமுறை இஸ்லாமிய சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றுவருகின்றது. ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை ஜாமியா நளீமிய்யா விரிவுரையாளர் அஷ்ஷேய்க் பழீல் (நளீமி) ஆற்றிய "பொறுப்புதாரிகளின் பொறுப்புக்கள் ஓர் அமானிதம்" எனும் உரையைத் தழுவி எழுதப்பட்டது.

>>> 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம்
வெட்ட வெட்ட தளைக்கும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
தாருஸ்ஸலாம்
இல.51, வொக்ஸ்ஷோல் ஒழுங்கை,
கொழும்பு - 02
தொலைபேசி 0112436752 பெக்ஸ் - 0112396699
மின்னஞ்சல்: editormaram@gmail.com

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# நல்லாட்சியில் முஸ்லிம் தனித்துவ அரசியல்

முஸ்லிம்களின் தனித்துவக் கட்சியாக தோற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை காலமும் பல்வேறுபட்ட சவால்கள், நெருக்குதல்கள் மத்தியில் முஸ்லிம்களின் உரிமை மற்றும் அபிவிருத்தி தொடர்பில் சாணக்கிய அரசியலை செய்துவருகிறது.

தேசிய ரீதியில் பேரினவாத கட்சிகளால் தோற்றுவிக்கப்படும் சவால்களை முஸ்லிம் காங்கிரஸின் தலைமை வெற்றிகரமாக எதிர்கொண்ட போதிலும், முஸ்லிம் கட்சிகள் என்ற பேரில் தோற்றுவிக்கப்பட்ட சிறு கட்சிகளினால் முஸ்லிம் அரசியல் பின்னடைவுகளை கண்டு வந்துள்ளது.

முஸ்லிம்களின் உரிமை சார்ந்த அரசியலை பேரினவாதிகளின் கைகளுக்குள் சிக்கிக் கொள்ளச் செய்வதில் முஸ்லிம் அரசியலில் முளைத்த இச்சிறிய கட்சிகள் பகடைக்காய்களாக இருந்துள்ளன.

தற்போது மலர்ந்துள்ள நல்லாட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் புதிய அரசியல் பரிமாணத்தில் பயணிக்க வேண்டியிருக்கிறது.

இன்று முஸ்லிம் அரசியல் எதிர்கொள்ளும் மிகப் பெரும் சவால் முஸ்லிம்கள் சிலர் மத்தியில் ஏற்பட்டுள்ள மனோபாங்கு மாற்றமாகும்.

தான் சார்ந்த ஊரை அல்லது பிரதேசத்தை மையப்படுத்திய குறுகிய மனோபாவம் முஸ்லிம் பிரதேசங்களுக்கு மத்தியில் பாரிய பிளவை தோற்றுவித்து விடுமா என்ற ஐயம் தற்போது எழுந்துள்ளது.

இத்தகைய சிந்தனை முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்துவரும் தனித்துவ அரசியலை பின்னடைவுக்கு இட்டுச் சென்றுவிடும் என்பதில் விழிப்போடு இருப்பதோடு, பொது மக்களிடத்தில் இதுபற்றிய தெளிவை ஏற்படுத்துவது எமது கடமையாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் தனித்துவ கட்சியாக செயற்படுகின்ற போதிலும், இக்கட்சி தேசிய அரசியலிலும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு முன்னேற்றகரமான பங்களிப்புகளை செய்து வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தேசியக் கட்சி என்ற வகையில், பிரதேசவாதம் சார்ந்த குறுகிய சிந்தனைகள் முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவ அரசியல் பயணத்தை ஒரு போதும் தடுத்து விடக்கூடாது என்பதோடு, இதனை ஒரு போதும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் அங்கீகரிக்க மாட்டாது என்பது நிச்சயம்.

# 1985 இலிருந்து போர் குற்ற விசாரணைக்கு

## தென்கிழக்குப் பல்கலை மாணவர்கள் வலியுறுத்து!

(எஸ்.எம்.அறூஸ்)

ஐக்கிய நாடுகளின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள் எப்படவுள்ள போர் குற்ற விசாரணை 1985ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.



வடமாகாணத்தில் வன பிரேதசமாக பிரகடனப்படப்படுத்தப்பட்டுள்ள காணிகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முஸ்லிம்களின் உரிமைகளை வலியுறுத்தி தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் மாணவர் அமைப்பினால் அண்மையில் ஏற்பாடு செய்த கவன ஈர்ப்பு போராட்டத்தின் போதே இவ் வேண்டுகோளை விடுத்தனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பெரும் திரளான தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பு உட்பட சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்த பேரணியில் பங்குபற்றியவர்கள் வடக்கிலிருந்து



வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் மீள்குடியேற்றம் காணி விவகாரம் மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக கோஷங்களை எழுப்பியதோடு சுலோகங்களையும் ஏந்தி இருந்தனர்.

இங்கு முஸ்லிம்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். வுடக்கிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்காக அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்ற பல்வேறு பட்ட விடயங்கள் அடங்கிய பிரகடனத்தை முஸ்லிம் மஜ்லிஸ் தலைவரினால் முஸ்லிம் மஜ்லிஸ் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அத்தோடு சிரேஸ்ட விரிவுரையாளர் பாசில் அவர்களினால் விசேட உரை ஒன்றும் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகளின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள யுத்தக் குற்ற விசாரணையை 1985ஆம் ஆண்டிலிருந்து தொடங்க வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம் சமூகத்தையும் உள்வாங்கவேண்டும்.

வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஐ.நா. விசாரணை செய்ய வேண்டுமென்பதுடன், அவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் வலியுறுத்தவேண்டும்.

முஸ்லிம் அரசியல் தலைமைகள், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் ஒருமித்த கருத்துடன் செயற்பட வேண்டும். வடபகுதி முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு ஜனாதிபதி ஆணைக்குழுவை துரிதமாக அமைக்க வேண்டும்.

வடமாகாணத்தில் வனப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள முஸ்லிம்களின் காணிகளை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

"வடமாகாணசபையே ஏன் முஸ்லிம்கள் விடயத்தில் மௌனம்?", "ஐக்கிய நாடுகள் சபையே ஏன் பாரபட்சம்?" "முஸ்லிம் அரசியல் தலைமைகளே ஒன்றுபட்டு ஒன்றைச் சொல்லுங்கள்", "முஸ்லிம்களை இருண்ட யுகத்துக்கு மீண்டும் தள்ளிவிடாதே", "மத வன்முறையினால் பாதிக்கப்பட்ட அளுத்கம முஸ்லிம்களுக்கான நியாயாம் எப்போது?" போன்றவை எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவண்ணம் இவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஆக்கங்களை வரவேற்கிறோம்

இப்பத்திரிகையில் அடுத்துவரும் இதழ்களில் உங்களது ஆக்கங்களையும் இணைத்து முஸ்லிம் சமூகத்தில் இலைமறை காயாக உள்ள எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க தயாராகவுள்ளோம்.

"மரம்" என்ற பெயரில் முதலாவது இதழாக உங்கள் கைகளில் விரிந்திருக்கும் இப்பத்திரிகை மாதமிருமுறை வெளிவரும். இப்பத்திரிகைக்கு உங்களது கருத்துக்களையும், விமர்சனங்களைம் ஆக்கங்களையும் அனுப்பி வைக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்து வருகின்ற ராஜதந்திர உறவை மீண்டும் பலப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அண்மையில் இலங்கை வந்த இஸ்ரேலிய பாராளுமன்ற தூதுக் குழுவொன்று பாராளுமன்றத்திற்கும் சென்றுள்ளமை இதனை உறுதிப்படுத்துவதாகவுள்ளது. இந்த தூதுக் குழுவினர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட இன்னும் எதிர்க்கும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடனான உறவை மீண்டும் பலப்படுத்துமானால் முஸ்லிம்களது பலத்த எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டி ஏற்படுமென்று அமைச்சர் எம். எச்.எம்.பௌசியும் அண்மையில் தெரிவித்திருந்தார். முஸ்லிம்களது எதிர்ப்பை கவனத்தில் எடுக்காது அரசாங்கம் இஸ்ரேல் விடயத்தில் செயற்படுமானால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் முஸ்லிம்களது வாக்குகள் திசை மாறக் கூடிய ஆபத்திருக்கின்றது பலஸ்தீன மக்களுக்கு சொந்தமான பெருமளவான நிலப்பரப்பை கபளீகரம் செய்து அந்நாட்டை விரிவுப்படுத்தி பலப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொண்டது. கோலான் மேட்டு நிலம், மேற்கு கரை ஆகியவற்றையும் இஸ்ரேல் ஆக்கிரமித்து தன்னகப்படுத்திக் கொண்டது.

அதன் காரணமாக பலஸ்தீனத்தில் இஸ்ரேல் உருவாகிய அன்று முதல் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. நவீன யுத்த தளபாடங்களுடனும், போர் விமானங்களுடனும் பலஸ்தீன மக்களை கொன்றொழிக்க பல்வேறு வடிவங்களில் இன்றும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

காலத்துக்கு காலம் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட வல்லரசுகளின் தலையீட்டால் பலஸ்தீனர்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வருவதோடு இஸ்ரேல் அதன் போக்கில் பலமடைந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு வரலாற்றையே இஸ்ரேல் கொண்டிருப்பதால் உலகளாவிய முஸ்லிம்கள் இஸ்ரேலை ஒட்டுமொத்தமாக வெறுக்கின்றனர். அரபு நாடுகள் இஸ்ரேலுடனான உறவுகளை துண்டித்து கொண்டிருக்கின்ற நிலையில் இலங்கை

# இலங்கை – இஸ்ரேல் உறவும் நல்லாட்சி அரசாங்கமும்

முக்கியஸ்தர்கள் பலரை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

இஸ்லாத்தின் ஜென்ம விரோதியான இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் வலுப்பெறுவதை இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் ஒருபோதும் விரும்புவதில்லை.

உலகம் முழுவதும் வாழ்கின்ற முஸ்லிம்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒரு நாடாக இஸ்ரேல் இருந்து வருகின்றது. இதன் பின்னணியிலேயே இலங்கை முஸ்லிம்களும் இந்நாட்டு அரசாங்கம் இஸ்ரேலுடனான உறவை புதுப்பிப்பதை முற்றாக வெறுக்கின்றனர்.

அரசாங்கம் இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான உறவை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்குமானால், அத்தகைய முயற்சியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் கட்சி என்ற அடிப்படையில் கடுமையாக என்ற தோரணையில் அவரும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எவ்வாறாயினும், முஸ்லிம்கள் இஸ்ரேலை ஏன் வெறுக்கின்றனர் என்பது நவீன கால சந்ததியினர் மத்தியில் எழுகின்ற முக்கியமான வினாவாகும். இஸ்ரேல் சர்வதேச அங்கீகாரத்தின் அடிப்படையில் உருவாகிய ஒரு தேசமல்ல. முன்னர் உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருக்கவில்லை.

சுயாதீனமும் தன்னாதிக்கமும் கொண்ட தேசமான பலஸ்தீன மண்ணில் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற பலம் வாய்ந்த நாடுகளின் உதவியுடன் பலவந்தமாக புகுத்தப்பட்ட தேசமே இஸ்ரேலாகும். 1948 ஆம் ஆண்டு இவ்வாறு பலஸ்தீன தேசத்தின் ஒரு பகுதியை பலவந்தமாக பிடித்து இஸ்ரேல் உருவாக்கப்பட்டமையை எல்லா முஸ்லிம் நாடுகளும் வன்மையாக எதிர்த்தன. பலஸ்தீனத்தின் ஒரு பகுதியில் நுழைக்கப்பட்ட இஸ்ரேல் நாளடைவில் போராடும் இஸ்ரேலிய அரக்கர்களுக்கு எதிராக பலஸ்தீன சிறுவர்கள் கூட துணிச்சலுடன் சிறு கற்களைப் பொருக்கி எறிந்து இன்திபாலா போராட்டத்தில் ஈடுபடுவதை கண்டு மேற்குலகம் கூட வியப்படைகின்றது. விஞ்ஞான வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்துள்ள நிலையில் பலஸ்தீன நிராயுதபாணிகளின் இத்தகைய போராட்டத்தை சிறு பிள்ளை தனமானதென யாரும் எண்ணி விடாதீர்கள்.

பலஸ்தீனர்களின் உயிரை குடிக்கும் தேசமாகவே இஸ்ரேல் உலக முஸ்லிம்களால் நோக்கப்படுகின்றது. அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் மிகவும் பலம் கொண்ட நாடாக சர்வதேச அரங்கில் பேசப்படுகின்றது. இந்நிலையில் பலஸ்தீன விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் முஸ்லிம்களும் இந்நாட்டு அரசாங்கம் இஸ்ரேலுடன் உறவுகளை பலப்படுத்துவதை விரும்பவில்லை.

இந்த அடிப்படையிலேயே அண்மையில் இஸ்ரேல் பாராளுமன்ற தூதுக் குழு இலங்கைக்கு வருகை தந்தமை அரசாங்கம் இஸ்ரேலுடனான உறவுகளை புதிய கோணத்தில் அணுகுவதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாக இருக்கலாம் என்று புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் மாத்திரமல்லாது, முஸ்லிம் பொது மக்கள் மத்தியிலும் பலத்த சந்தேகம் நிலவுகின்றது.

அவ்வாறான நிலைமை ஏற்படுமானால், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அமைச்சர்களும், உறுப்பினர்களும் கட்சி பேதம் பாராமல் அதனை முழுமையாக எதிர்க்க வேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய வரையறைக்குள்
# அரசியலில் பெண்கள்



இலங்கையின் அரசியல் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் அன்று இந்நாட்டில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கான உரிமைகளும், சலுகைகளும் உரிய முறையில் வழங்கப்படாது அவர்கள் அநாதைகளாகவே கருதப்பட்டனர். காலப்போக்கில் முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முன்னோர்களான எமது தலைவர்கள் பலர் குரலெழுப்பினர்.

1989ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம்களின் பிரச்சினைகள் உரிமைகள் பற்றி பாராளுமன்றத்தில் முஸ்லிம்களின் குரல் ஓங்கி ஒழித்தது.

மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி அமைப்புக்களிலும் முஸ்லிம் பிரதிநிதிகளின் குரல் எதிரொலித்தது. முஸ்லிம்களுக்கான தனித்துவமான அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக இந்நாட்டு முஸ்லிம்களுக்கு அரசியல் முகவரியை பெற்றுக்கொடுத்த மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இதற்கு வழிகோலியவராக மதிக்கப்படுகின்றார். அன்னார் முஸ்லிம்களின் எழுச்சிக்காக தமது வாழ்நாளையே அர்ப்பணித்து இறுதி மூச்சு வரை அரசியலில் அயராது ஈடுபட்டு உழைத்தார்.

எதிர் கட்சி அரசியலில் 6 வருடங்களும், ஆளுங்கட்சி அரசியலில் 6 வருடங்களும் ஈடுபட்ட அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களது ஆழமான சிந்தனைகளும், சமயோசிதமாக அவ்வப்போது மேற்கொண்ட அதிரடி முடிவுகளும் இந்நாட்டு முஸ்லிம்களின் வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனைகளாக அமைந்தன. அக்காலப்பகுதியில் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் தூர நோக்குடனான நுணுக்கமான செயற்பாடுகளினால் அரசாங்கங்களே ஆட்டம் கண்டன.

மர்ஹூம் அஷ்ரப் பொதுவாக நாட்டு நலனுக்காகவும் குறிப்பாக, சிறுபான்மை சமூகங்கங்களுக்காகவும், அதிலும் குறிப்பாக, அரசியல் அநாதைகளாக இருந்த முஸ்லிம்களினது விடிவிற்காகவும் துணிச்சலுடன் போராடினார்.

முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரையில் பெண்களின் அரசியல் ஈடுபாடு 1990ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் மிகவும் மந்தமான ஒரு நிலையிலேயே காணப்பட்டது. தேர்தல் காலங்களில் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு செய்யப்படாமை, வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதில் ஆர்வமின்மை போன்ற செயற்பாடுகளின் காரணமாக பெண்களின் ஈடுபாட்டை அதிகரிக்க செய்ய வேண்டிய தேவை பெரிதும் உணரப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தில் பெண்களுக்கு அரசியல் சிந்தனையையூட்டி, தேசிய அரசியல் சார்ந்த செயற்பாடுகளுக்கு அவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான முன்னெடுப்புக்களிலும் மர்ஹூம் அஷ்ரப் அதிக கவனம் செலுத்தினார்.

அதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மகளிர் காங்கிரஸை உருவாக்கியமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும், முஸ்லிம் பெண்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அரசியலில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல், தேர்தல் காலங்களில் வாக்களிப்பில் பெண்களை ஈடுபட வைத்தல், பொது வாழ்க்கையில் சமூக மேம்பாட்டு செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பை உச்ச அளவில் பேணுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன ஏனைய செயற்பாடுகளாகும்.

இந்தப் பின்னணியில் இஸ்லாம் காட்டுகின்ற வாழ்க்கை வழிகாட்டல்களுக்கமைவாக, தலைமைத்துவம் வழங்குவதிலும், தொழில் துறைகளில் ஈடுபடுவதிலும், பொது வாழ்க்கையில் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடு மிகவும் அரிதாகவே இருந்து வருகின்றது. பல்லின சமூகங்களை கொண்ட இலங்கையில் முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கல்வி துறைகளிலான விழிப்புணர்வு வீதத்தின் உயர்வு, ஆங்கில, கணனி தொழில் நுட்ப மற்றும் விஞ்ஞான அறிவு போன்ற குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காரணமாக இன்று பல்வேறு மட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு உயர்வடைந்துகொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை போன்ற நாடுகளில் சிறுபான்மை சமூகமாக முஸ்லிம்கள் வாழ்ந்தாலும், பொது வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி வெறுமனே வர்த்தக மற்றும் விவசாய சமூகமாக எமது தேவைகளை ஈடுசெய்துகொள்ள முற்படுகின்ற போது முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் முடக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்படுகின்ற சூழ்நிலைகள் உருவாகலாம்.

இந்நிலைமையிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு ஆண், பெண் இருபாலாரினதும் அரசியல் பிரவேசமும் பங்களிப்பும் இன்றியமையாதவை.

இலங்கை அரசியலில் பெண்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதற்கு அண்மைக் காலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். உள்ளூராட்சி மன்றங்கள் தொட்டு மாகாண சபைகள், பாராளுமன்றம் வரையில் பெண்கள் பிரதிநிதித்துவங்களைப் பெற்று அரசியலில் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பது பிரதமரின் நோக்கமாகும். பெண்களின் பிரதிநிதித்துவம் அரசியலில் அதிகரிக்கின்ற போது சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு மட்டங்களிலான பிரச்சினைகள், தேவைகளை பெண்கள் மூலமே வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

அதன் மூலம் ஒவ்வொரு சமூகத்திலும் மகளிர் அரசியல் பொருளாதார மேம்பாடு ஏற்படுவதற்கு உந்துதல் ஏற்படும்.

இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கருத்தொன்றை முன்வைத்திருந்தார்.

**எம்.எப்.எப்.ப(f)ஸ்னா**

அரசியலுக்குள் பெண்களை உள்வாங்கி அவர்களை அரசியல் பிரதிநிதிகளாக வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாய நிலைமை தோன்றியுள்ளதுடன் அதற்கான ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுக்கவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

>>> 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸும் சாத்தியமானவற்றை சாதிக்கும் அரசியல் கலையும்




"அரசியல் என்பது சாத்தியங்களின் கலை" என்பார்கள். "சாத்தியமானவற்றைச் சாதித்துக் கொள்ளும் கலை"தான் அரசியல் என்றும் கூறுவார்கள். எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருப்பது ஒருவகை வெப்புசாரத்தின் வெளிப்பாடாகும். அனைத்துக்கும் "ஆமாம்" போடுவது அடிமை புத்தி. இந்த இரண்டுக்கும் இடையில் பயணிக்கும்போது, சாத்தியமானவற்றைச் சாதித்துக் கொள்ளும் கலை உருவாகிறது.

கணிசமானவற்றில் அரசியல் இருக்கிறது. அரசியலில் அநேகமாக எல்லாமுமே சாத்தியமுமாகிறது. சாத்தியமானவற்றையெல்லாம் சாதித்துக் கொள்ளும் அனைத்தும் அரசியலாகிறது.

இதை இன்னொரு வகையில் சொன்னால், இணக்க அரசியல் - பிணக்கு அரசியல் ஆகியவற்றுக்கு நடுவிலுள்ள மெல்லிய கோட்டில் பயணித்துக் கொண்டிருக்கிறது, சாத்தியமானவற்றினைச் சாதித்துக் கொள்ளும் கலை.

வேறொரு வகையாகவும் இதைச் சொல்ல முடியும். சூழ்நிலையறிந்து இணங்கியும் பிணங்கியும் பயணிக்கும் தருணங்களில், சாத்தியமானவற்றைச் சாதித்துக்கொள்ளும் கலை உருவாகிறது எனலாம்.

இலங்கை முஸ்லிம் அரசியல் அரங்கில், "சாத்தியமானவற்றைச் சாதித்துக் கொள்ளும் கலையாக" அரசியலை மிகவும் நளினத்துடன் கையாண்டதொரு கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைக் காண முடிகிறது. இந்தக் கட்சியின் உயிர்ப்புக்கும், நிலைப்புக்கும் இதுவே காரணமாகவும் உள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் வரலாறு முழுக்க இந்த வகை அரசியல் பரவிக் கிடக்கிறது. எதிர்க்கட்சியாகவும், ஆளுங்கட்சியாகவும் இருந்து, முஸ்லிம் காங்கிரஸ் இதை கணிசமான அளவு சாதித்திருக்கிறது.

மிருகமாகவும், பறவையாகவும் உருவெடுத்து முஸ்லிம் அரசியல் அரங்கில் நுழைந்தவர்கள், தங்கள் அரசியலின் ஆரம்பம் முதல் இறுதிவரை, அல்லது இப்போது வரை, ஆட்சியாளர்களுக்கு "ஆமாம்" போடுகின்ற சார்பு நிலை அல்லது ஆளுந்தரப்பு அரசியலையே தொடர்ச்சியாகச் செய்து வந்தார்கள், வருகின்றார்கள். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் இந்த இடத்தில் வேறுபட்டு நிற்கிறது.

சூழ்நிலைகளின் தன்மையினைப் புரிந்து கொள்ள முடியாமல் கண்மூடித்தனமாக சார்பு நிலை அரசியலைப் புரிவதென்பது, ஓர் அரசியல் கட்சியின் இருப்பினையே கேள்விக்குறியாக்கி விடும் என்பதற்கு, அரசியல் அரங்கில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. முஸ்லிம் அரசியல் அரங்கில் இதற்கு அண்மைய உதாரணம் "குதிரை".

அதுபோலவே, தொடர்ச்சியான எதிர்நிலை அரசியல் செயற்பாடுகளும் ஒரு கட்டத்தில் சாத்தியமிழந்து போய்விடும் என்பதற்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக் காலத் தீர்மானம் நல்லதொரு உதாரணமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது கிழக்கு மாகாணசபையின் ஆளுந்தரப்பாக மாறி, அமைச்சு உள்ளிட்ட பதவிகளைப் பெற்றுக்கொண்டமையானது, தொடர்ச்சியான எதிர்ப்பு அரசியல் என்பது எல்லா சந்தர்ப்பங்களிலும் சாத்தியமாகாது என்பதை உரத்துச் சொல்கிறது.


**தம்பி**

சில தருணங்களில் சாத்தியமானவற்றினைச் சாதித்துக் கொள்ளும் கலை, முஸ்லிம் காங்கிரஸுக்குக் கைகூடாமலும் போயுள்ளது. ஆனாலும், அநேகமான தருணங்களில் சாத்தியமானவற்றைச் சாதித்துக் கொள்ளும் கலையாக, அரசியலை முஸ்லிம் காங்கிரஸ் செய்து பார்த்திருக்கிறது.

>>>> 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# “உண்மைமை
# ஒவ்வொரு பு
# என்ற மனப்ப



## பாராளுமன்றத்தில் மு.கா. தலைவர் ஹக்கீம்

இலங்கையின் இனப் பிரச்சினை பற்றி பேசும் பொழுது அது பொதுவாக சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையிலான மோதலாகவே நோக்கப்படுகின்றது. அதற்கும் அப்பால், அது தமிழ் பேசும் முஸ்லிம் மக்களினதும் பிரச்சினையாகும். அத்துடன் மலைநாட்டு தமிழ் சமூகத்தையும் பாதிக்கும் பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினை இந்த நாட்டில் ஒவ்வொரு வீட்டின் வாசல் படியையும் மிதித்திருக்கிறது. ஒவ்வொரு வீட்டின் வாசல் கதவையும் தட்டியிருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீர் வழங்கள் மற்றும் நகர திட்டமிடல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஜெனீவா பிரேரணை தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் பாராளுமன்றத்தில் மேலும் தெரிவித்ததாவது,

எனக்கு முன்னர் உரையாற்றிய உறுப்பினர், ஜெனீவா பிரேரணையின் ஊடாக எமது படையினரை யுத்த நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கு முற்படுவதாக கூறினார். அது குருடன் யானை பார்த்த மாதிரியானது. உண்மையில் இந்த பிரேரணை தொடர்பாக சரியான தெளிவுடன் நாங்கள் பேச வேண்டும். ஜெனீவா செயன்முறை இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல. 1980களிலிருந்து பல அரசுகள், பல நாடுகள் ஏன் எமது நாட்டிலும் வெவ்வேறு அரசாங்கங்கள் இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

1988, 1989, 1990 கலவரங்களின் போது தெற்கின் எழுச்சியை வீழ்த்துவதில் வெற்றிகண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் அந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான மனித உரிமை சம்பந்தமான பிரச்சினைகளுக்குள்ளாக நேர்ந்தது. அதுதொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார உட்பட அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜெனீவாவுக்கு சென்றிருந்த வேளையில் நடந்தவை பற்றி எங்கள்

நாங்கள் சில இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் மூலம் ஒருமைப்பாட்டுடன் நாம் அவற்றுக்கு முகங்கொடுக்க தயாராக வேண்டும் என்றவாறு தான் ஜனாதிபதி அலுவலகத்தில் சர்வ கட்சி மாநாடு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அப்பொழுது 1980களிலிருந்தவாறு சிலர் அந்த வாய்ப்பை பயன்படுத்தி சந்தர்ப்பவாதிகளாக மீண்டுமொரு முறை ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான செயற்பாடாக அதனை ஆக்கிக்கொண்டார்கள்.

இந்த சபைக்குள் உறுப்பினர்கள் பேசுவதற்குரிய உரிமை கூட பறிக்கப்பட்டுள்ளதாக இப்பொழுதொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதி அமைதியாக பதிலளித்துள்ளார். பாராளுமன்றத்துக்குள் பேசப்படும் விடயங்களில் நான் தலையிட

எல்லோருக்கும் தெரியும்.

அதுமட்டுமல்ல, வடக்கில் கலவரத்தை ஒழித்துக்கட்டி, வெற்றியீட்டிய பின்னர் மீண்டும் ஜெனீவா பற்றி பேசப்படுகின்றது. அதுபற்றி பல்வேறு கோணங்களிலிருந்து பார்ப்பவர்கள் இருக்கின்றனர். எப்பொழுதும் கூறப்படும் வார்த்தைப் பிரயோகங்களை கேட்கிறோம். அவையாவன, தண்டனை வழங்குவது, மன்னிப்பு அளிப்பது, நல்லிணக்கம் காண்பது, பொறுப்புக் கூறுவது, உண்மையைக் கண்டறிவது, நேர்மையை கடைப்பிடிப்பது என்பன பற்றி இந்த அவைக்குள் நாங்கள் அடிக்கடி பேசுகின்றோம்.

உண்மையில் இதன் நோக்கம் நாம் முகங்கொடுக்கும் பிரச்சினை என்பன பற்றி ஒரு நாடு என்ற வகையிலும் இந்நாட்டில் பிரதான கட்சிகளில் ஒன்று என்ற வகையிலும் இந்த சபையில்

விரும்பவில்லை. இருப்பினும் அவர்களது கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரத்திற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமானால் அதனை நிவர்த்தி செய்யுமாறு தாம் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இப்பொழுது நாம் நாட்டின் சுயாதிபத்தியம்இ இறைமை, எல்லைகளின் பாதுகாப்பு என்பன சம்பந்தமாக எங்களுக்குள்ள உரிமையில் அதாவது உள்விவகாரங்களில் சர்வதேசம் தலையீடுவதாக நாங்கள் பேசுகின்றோம். இவ்வாறான நிலைமையில் நாட்டு பற்று சம்பந்தமாக நான் ஒன்றை கூறவேண்டும்.

“தேசப்பற்று என்பது கயவர்களின் கடைசி அடைக்கலம்” என ஆங்கிலேய எழுத்தாளர் மார்க்

**ஏனென்றால், பொறுப்புக் கூறல் சரிவர மேற்கொள்ளப்பட்டதா என்பதை கண்டறிய வேண்டிய உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உள்ளது. பாதிப்புக்குள்ளானவர்களுக்கு அந்த உரிமையை வழங்க வேண்டும். அதனால் எங்களுக்கு எதுவும் குறைந்துவிடாது.**

**மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு முடிவு காண வேண்டும். உண்மை வெளிப்பட வாய்ப்பில்லாத நடைமுறையூடாக மக்களின் துயரங்களுக்கு நாம் எவ்வாறு முடிவு காண்பது? உண்மைகளை மூடி மறைப்போமானால் நாம் எல்லோரும் கடந்த காலத்தில் அனுபவித்த துயரங்களுக்கு உண்மையில் என்ன காரணம் என்று தெரிய போகின்றது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யை மூடி மறைக்க முடியாது. புதருக்கு பின்னாலும் பேய்!"

## போன்மை மாற வேண்டும்

ட்ருவைன குறிப்பிட்டுள்ளார். அது முற்றிலும் உண்மை என நம்புகின்றேன். இந்த சபைக்குள் சிலர் பேசுவதை பார்க்கும்போது அந்த உண்மை நன்கு புலப்படுகின்றது. (குறுக்கீடு)

2009ஆம் ஆண்டு யுத்த வெற்றியின் பின்னர் இந்நிலைமைக்கு நாம் ஆளாகியுள்ளோம். அது பற்றி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் இந்த இக்கட்டான நிலைமைக்கு நாம் உள்ளாகியிருக்க மாட்டோம்.

ஆனால் நாம் சர்வதேசத்திடம் அளித்த வாக்குறுதிகளை மீறியிருக்கிறோம். அதனால் நிலைமை மோசமானது.

ஆனால் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்படயிருந்த இந்த பிரேரணையை எங்களது அரசாங்கத்தின் வேண்டுகோளையடுத்து செப்டெம்பர் மாதம் வரை பிற்போடுவதற்கு சர்வதேசம் உடன்பட்டதை இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன். எவ்வாறான காரணங்களுக்கு நாம் உடன்பட முடியும், எவ்வாறு நாம் முன் ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும், உள்ளக பொறிமுறையை பொருத்தவரை எவ்வாறான நிபந்தனைகளுக்கு எங்களால் இணக்கம் தெரிவிக்க முடியும் போன்றவற்றை ஆழமாக சீர்தூக்கி பார்த்து தான் நாங்கள் இந்த செயன்முறைக்கு சம்மதித்தோம்.

அதற்கு சர்வதேசம் ஒத்துழைத்தது. அது சம்பந்தமாக கவனத்தில் எடுத்து ஆயத்தப்படுத்துவதற்கு எங்களுக்கு 6 மாத கால அவகாசம் கிடைத்தது. இப்பொழுது நாங்கள் அதற்காக தயாராகி உள்ளக பொறிமுறைக்குள் தீர்வு காண வேண்டுமென இணங்கியிருக்கிறோம். ஆனால், இதிலிருந்து எங்களால் தப்பிக்க இயலாது.

இதனால் எந்த ஆபத்தும் ஏற்பட போவதில்லை. நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறலையும் ஒன்றுக்கொன்று முரணானவை என நோக்குவோரும் உள்ளனர். அவை இரண்டும் ஒருபோதுமே ஒத்துப்போகாதவை என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அலகப்பெரும இங்கு கூறினார். நான் அதற்கு

**ஒவ்வொரு சமூகத்தினரும் உயிர்களை பறிகொடுத்திருக்கிறார்கள். உடைமைகளை இழந்திருக்கிறார்கள். வாழ்வாதாரங்களை இழந்திருக்கிறார்கள் ஆகவே, இந்த விடயத்தை பேச வேண்டிய இந்த நேரத்தில் பேச வேண்டும். ஆகையால்தான் சர்வதேச சமூகம் பொறுப்பு கூறும் விடயத்தை வலியுறுத்தி வருகிறது. பொறுப்புக் கூறல் என்பது மக்களை உடனடியாகவே தண்டிப்பது என்பதல்ல**

உடன்பட மாட்டேன்.

ஏனென்றால், பொறுப்புக் கூறல் சரிவர மேற்கொள்ளப்பட்டதா என்பதை கண்டறிய வேண்டிய உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உள்ளது. பாதிப்புக்குள்ளானவர்களுக்கு அந்த உரிமையை வழங்க வேண்டும். அதனால் எங்களுக்கு எதுவும் குறைந்துவிடாது.

மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு முடிவு காண வேண்டும். உண்மை வெளிப்பட வாய்ப்பில்லாத நடைமுறையூடாக மக்களின் துயரங்களுக்கு நாம் எவ்வாறு முடிவு காண்பது? உண்மைகளை மூடி மறைப்போமானால் நாம் எல்லோரும் கடந்த காலத்தில் அனுபவித்த துயரங்களுக்கு உண்மையில் என்ன காரணம் என்று தெரிய போகின்றது.

எனது சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையின் இனப் பிரச்சினை பற்றி பேசும் பொழுது பொதுவாக சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையிலான மோதலாகவே நோக்கப்படுகின்றது. அது அதற்கும் அப்பாலானது. அது தமிழ் பேசும் முஸ்லிம் மக்களினதும் பிரச்சினையாகும் அத்துடன் மலைநாட்டு தமிழ் சமூகத்தையும் பாதிக்கும் பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினை இந்த நாட்டில் ஒவ்வொரு வீட்டின் வாசல் படியையும் மிதித்திருக்கிறது. ஒவ்வொரு வாசல் கதவையும் தட்டியிருக்கிறது.

ஒவ்வொரு சமூகத்தினரும் உயிர்களை பறிகொடுத்திருக்கிறார்கள். உடைமைகளை இழந்திருக்கிறார்கள். வாழ்வாதாரங்களை இழந்திருக்கிறார்கள் ஆகவே, இந்த விடயத்தை பேச வேண்டிய இந்த நேரத்தில் பேச வேண்டும். ஆகையால்தான் சர்வதேச சமூகம் பொறுப்பு கூறும் விடயத்தை வலியுறுத்தி வருகிறது. பொறுப்புக் கூறல் என்பது மக்களை உடனடியாகவே தண்டிப்பது என்பதல்ல.

பிரதமர் ஒருவாறு தலையிட்டு மன்னிப்பு சபையை ஏற்படுத்த இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கிறார். அதற்கு அப்பால் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவையும் ஏற்படுத்தவுள்ளோம். மன்னிப்பு சபை சமய பெரியார்களையும் உள்ளடக்கியிருக்கும். சமயத் தலைவர்கள் முழு நல்லிணக்க நடைமுறைகளுக்கும் வழிகாட்டுதல்களை வழங்குவார்கள்.

இப்பொழுது வடக்கு முஸ்லிம்களின் பரிதாப நிலையை பாருங்கள். 25 வருடங்களாக அவர்கள் தற்கால அகதி முகாம்களில் வாழ்க்கையை கடத்துகிறார்கள். அவர்களது மீள்குடியேற்றம் நடைபெற வேண்டியிருக்கிறது. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் ஒரு பகுதியினரே மீண்டும் தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர். இன்னும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது பூர்வீக இடங்களுக்கு கௌரவமாக மீள திரும்ப வேண்டியுள்ளது.

சுயமரியாதையை இழந்து திரும்ப செல்வதற்கு பல வழிகள் உள்ளன. போதுமான தங்குமிட வசதி இல்லை, கட்டமைப்புக்கள் வசதிகள் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு திரும்பச் செல்வது? அவர்களில் அநேகர் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் அவர்களது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். வடமேல் மாகாணத்தில் இன்னும் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்களை குறிப்பாக புத்தளம் மாவட்டத்தை அங்கேயே கடந்த காலத்தை போன்று வாக்களிப்பதற்கு சட்ட திருத்தத்தின் மூலம் ஏற்பாடு செய்யும் வாய்ப்புகளை பற்றி பிரதமருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

ஜெனீவா பிரேரணை சமநிலையானதொன்று என ஜனாதிபதி செயலகத்தில் ஆர். சம்பந்தன் தெரிவித்த கருத்தினால் திருப்தியடைகின்றேன். நிறைவேற்றப்பட்ட இணைத் தீர்மானம் புலம்பெயர்ந்த தமிழர்களை திருப்திப்படுத்தவில்லையென கோஷ மெழுப்பப்படுகின்றது.

அந்த ஆவணம் தீவிரவாத தமிழ் கருத்தியலையும், தீவிரவாத சிங்கள கருத்தியலையும், தீவிரவாத முஸ்லிம் கருத்தியல் என்றொன்று இருக்குமானால் அதனையும் திருப்திப்படுத்தக் கூடியதாக இருக்காது. இது, இந்த நாட்டில் நல்லிணக்கத்தை யதார்த்த பூர்வமாக அறிமுகப்படுத்துவதற்குரிய சமநிலையான ஆவணமாகும்.

ஆகையால், தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே நாங்கள் ஒவ்வொரு புதருக்குள் பின்னாலும் பேயைக் காண முடியாது. முதலில் நாங்கள் அந்த ஆவணத்தை முழுமையாக பரிசிலிக்க வேண்டும்.

அந்த ஆவணத்தை அதன் முழு வடிவில் நோக்கினால் அதனை சர்வதேச சமூகம் உண்மை வெளிப்படும் வகையில் நோக்கவே விரும்புகின்றது என்பது புலனாகும்.

உண்மையில் வெளிக்கொணரப்படுவதால் அதனூடாக மக்கள் இறுதியில் தங்களது வேறுபாடுகளை மறந்து அவர்கள் இழந்த கௌரவத்தை மீட்டெடுப்பதற்கு இயலுமாக இருக்கும். எனவே, உண்மையை உற்றுநோக்காது தீக்கோழி மணலில் தலையை புதைத்து கொள்வதை போல் நாங்கள் கதைக்க முடியாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் தேர்தலை...

(01ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதனடிப்படையில் ஆட்சேபனைகளை தயாரிக்கும் பணி பல கட்சிகளினாலும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எல்லை நிர்ணயம் குறித்த விவகாரத்தை அவசர அவசரமாக முடிவுக்கு கொண்டுவருவது என்பது இலகுவான காரியமல்ல எனக் கூறப்படுகின்றது. இந்த விவகாரத்தை ஆக்கபூர்வமாக ஆராய்வதற்கு என்று நில அளவையாளர் நாயகம் இந்தக் குழுவின் அமர்வுகளுக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இருந்த போதிலும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பிரகாரம் 2016 ஜனவரி மாதத்தில் நியமனப்பத்திரங்கள் கோருவதாக இருந்தால் இந்த எல்லை நிர்ணயம் குறித்த நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து விடலாமா என்பதில் பலத்த சந்தேகம் நிலவுவதாகவும், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சித் தேர்தலை தாமதப்படுத்துவது ஆரோக்கியமானதல்ல என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ஹக்கீம் உபகுழுக் கூட்டங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கடந்த அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணய விடயத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் பாதிப்புக்குள்ளாகின்ற அபாயம் பல இடங்களில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சாய்ந்தமருதுவுக்கு என்று தனியான பிரதேச சபை அமையவேண்டுமென்ற தீர்மானமும் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட முன்னர் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறே, அம்பகமுவை பிரதேச சபை போன்ற இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட பெரிய பிரதேச சபைகளை கூறுபோடப்பட்டு, மலையகத் தமிழ் மக்களுக்கு 3 அல்லது 4 மேலதிக பிரதேச சபைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டுமென அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தி வருகின்றார்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து இயங்கும் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யுனிசக் கட்சி போன்ற சோஷலிசக் கட்சிகள் கூட தனித்திருந்து பிரதிநிதித்துவத்தை பெறமுடியாத நிலையை ஏற்படுத்துவது மட்டுமல்ல, பெரிய கட்சிகளின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலைமையை உருவாக்குவதும் ஆரோக்கியமானதல்ல.

புதிய எல்லை நிர்ணயம் தாமதமாகுமிடத்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை இழுத்தடிக்காமல் தற்போது நடைமுறையிலுள்ளவாறு தேர்தலை நடத்துவதே சிறந்ததென தமது கட்சியினர் மட்டுமல்லாது ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சர் கபீர் ஹாசிம் போன்றவர்களும் வலியுறுத்தி வருவதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்ற விடாது தடுப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணயக் குழுவினர் முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் அழுத்தத்தின் பேரில் பாரபட்சம் காட்ட இடமளித்ததாக பரவலாகப் பேசப்படுகிறது எனவும் அவர் மேலும் கூறினார்.

இவ்வாறான கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியில் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளும் மாற்றமான நிலைப்பாடுகளை கொண்டிருப்பது அடுத்த தேர்தலை எந்த முறையில் நடாத்துவதென்பது குறித்து ஒரு தெளிவற்ற நிலைமையை உருவாக்கியிருப்பாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சுட்டிக்காட்டினார்.

புதிய வட்டார தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் கட்சிக்குள் இருக்கின்ற முரண்பாடுகள் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதில் சவாலாக அமையாமல் தடுத்துக் கொள்ளலாம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் சிலர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தயுள்ளனர்.

அந்த யூகம் ஐக்கிய தேசிக் கட்சி கூடுதலான சபைகளை வெல்வதற்கு வழிவகுக்கலாம் என்ற யதார்த்தம் குறித்த உணர்வு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

எப்படியாவது தாங்கள் ஆட்சியை கைப்பற்றிவிடலாம் என்பதை வைத்து ஏட்டிக்குப் போட்டியாக ஜனாதிபதியிடம் கருத்து கூறிவரும் நிலையில், ஜனாதிபதியும், பிரதமரும் இது குறித்த ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டிற்கு வருவது அவசியமானதெனவும் அவர் தொடர்ந்து கூறினார்.


இவற்றுக்கு மத்தியில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தாம் சுதந்திரக் கட்சியினரை வெற்றி பெறச் செய்வதற்கு பாடுபடப்போவதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்த கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியில் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த ஒரு பிரதேசத்தில் ஓர் இனத்தவர் 33 சதவீத த்திற்கு கூடுதலாக இருந்தால் அதை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக பிரகடனப்படுத்துவதாக கொழும்பு போன்ற பிரதேசங்களில் எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவுகள் மற்றப் பிரதேசங்களுக்கும் செயற்படுத்தப்படுமா? வேண்டுமென்றே சிறுபான்மையினர் செறிவாக இருக்கின்ற பிரதேசங்களைக் கூறுபோட்டு 2 அல்லது அதற்கு மேற்பட்ட வட்டாரங்களுக்குள் சிதறடித்து சிறுபான்மையினருக்கு சாதகமான தனிவட்டாரங்களை இல்லாமல் செய்வதற்கான இரட்டை அங்கத்தவர்கள் அல்லது மூன்று அங்கத்தவர் தொகுதிகள் என்ற ஏற்பாடு மூலம் பல இடங்களில் சிறுபான்மை சமூகங்களுக்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது என்பது குறித்தும் அமைச்சர் ஹக்கீம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில் மலாய் காங்கிரஸ் அலுவலகம் திறப்பு

(ஜெம்சாத் இக்பால்)

உலக மலாய் அமைப்பின் தலைவரும், மலாக்காவின் முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய செனட்டரும், ஆளும் உம்னோ கட்சியின் பிரதித் தலைவருமான முஹம்மது அலி ருஸ்டாம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் அங்கமான மலாய் காங்கிரஸின் அலுவலகத்தை கட்சியின் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அழைப்பை ஏற்று "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் வியாழக்கிழமை (05) மாலை திறந்துவைத்தார்.



இந்நிகழ்வில் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் அஸ்மி ஜைனுதீன், முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவுத், பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான முத்தலிப் பாவா பாறூக், எம்.எஸ்.எம்.அஸ்லம் ஆகியோர் உட்பட மலாய் சமூகத்தினர் அனேகர் பங்குபற்றினர்.

இலங்கை மலாய் சமூகத்தினரின் நன்மை கருதி இந்த அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸில் 5000 மேற்பட்ட மலாய் சமூகத்தினர் உறுப்புரிமை பெற்றுள்ளனர்.

ஆளும் உம்னோ கட்சியின் பிரதித் தலைவருமான முஹம்மது அலி ருஸ்டாம் இலங்கை வந்துள்ள மலேசிய தூதுக் குழுவினர் கண்டியில் நடைபெறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கும் வருகை தரவுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கும், மலேசியாவின் ஆளும் உம்னோ கட்சிக்குமிடையில் நெருங்கிய இருதரப்பு உறவுகள் நிலவிவருவது குறிப்பிடத்தக்கது.

துன்னியா மலாயு, துன்னியா இஸ்லாம் எனப்படும் உலக மலாயர் அமைப்பின் இலங்கைக் கிளை தலைவரும், முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான அன்வர் உலூமுதீன் பிரஸ்தாப மலாய் தூதுக் குழுவிற்கான ஏற்பாடுகளை கவனித்து வருவதாக மலாய் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிர்வாகச் செயலாளருமான முஹம்மது நிசாம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் வலுவூட்டல் பணியில்
# இளைஞர் காங்கிரஸ்



முஸ்லிம் காங்கிரஸின் சமூகத்திற்கான உரிமைப் போராட்டத்தில் முஸ்லிம் இளைஞர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இளைஞர்களின் பங்களிப்பினூடாக இன்றும் முஸ்லிம் காங்கிரஸ் தமது அரசியல் போராட்டத்தை தொடர்ந்த போதிலும், இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொண்டு இந்த சமூகத்தின் ஆளுமைகளாக அவர்களை மாற்ற வேண்டியது முஸ்லிம் காங்கிரஸின் கடப்பாடு என்பதை இக்கட்சியின் தலைமை அடையாளம் கண்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸில் உள்ள இளைஞர்களை தொடர்ச்சியாக கட்சியின் செயற்பாடுகளில் வினைத்திறனோடு ஈடுபடுத்தி, துடிப்பான இளைஞர்களை புதிதாக கட்சியில் இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை இன்று அதிகம் கட்சியினால் உணரப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொள்ளும் இளைஞர்கள் தனது சொந்த தேவைகள் எதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்வதோடு தனது சமூகத்திற்கான பங்களிப்பை வழங்குவதன் ஊடாக தேசிய ரீதியிலும் பங்காற்ற முடியும். இதன் மூலமே இளைஞர்களாகிய நாம் எமது தேசப்பற்றை வெளிப்படுத்த முடியும். இதற்குக் களம் அமைப்பதாகவே முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தமது எதிர்கால செயற்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளது.

இளைஞர்கள் வெறுமனே அரசியல் ரீதியான செயற்பாடு களுடன் தமது திறமைகளை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் அவர்களை வலுவூட்டுவதன் மூலம் தமக்கான எதிர்கால தொழில் பாதையை தீர்மானித்துக் கொள்வதோடு சமூகத்திற்கான தங்களது பங்களிப்புக்களை திறம்பட வழங்க முடியுமாக இருக்கும். இதனை நோக்காகக் கொண்டு இளைஞர் காங்கிரஸ் அடுத்த வருடத்திற்கான வேலைத்திட்டமொன்றை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டை தொடர்ந்து அனைத்து ஊர்களிலும் இளைஞர் காங்கிரஸ் அமைப்பு மறு சீரமைக்கப்பட்டு புதிய நிருவாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் இளைஞர் காங்கிரஸ் நிருவாக குழு, இளைஞர் காங்கிரஸ் தேசிய திட்டமிடல் குழுவின் வழிகாட்டலைப் பெற்று தமது ஊருக்கான வருடாந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இளைஞர் காங்கிரஸ் செயற்பாடு களை ஊர் மட்டத்தில் பரவலாக்க முடியும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் இளைஞர் காங்கிரஸ் நிருவாக உறுப்பினர்களுக்கு தலைமைத்துவ வழிகாட்டலுடன் ஏனைய திறன் விருத்தி பயிற்சிகளும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் வலுவூட்டல் பணியின் மற்றுமொரு செயற்பாடாக இவ்வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியில் தொழில் வழிகாட்டல்களை வழங்க இளைஞர் காங்கிரஸ் தீர்மானித் துள்ளது. இச்செயற்திட்டம் டிசம்பர் மாதமளவில் இளைஞர் காங்கிரஸ் நிருவாக குழுக்களின் மூலம் அவர்களின் பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்படும்.

அதேநேரம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறப்பு சாதனை படைத்த மாணவர்களை மாவட்ட ரீதியாக தெரிவு செய்து அவர்களை கௌரவித்து ஊக்கப்படுத்தும் வேலைத் திட்டமொன்றையும் இளைஞர் காங்கிரஸ் நடத்த திட்டமிட்டுள்ளது.

இளைஞர்கள் எதிர்கொள்ளும் இன்றைய மிகப் பெரிய சவால் அவர்களுக்கான தொழில் துறை ஒன்றைத் தேடிக் கொள்வதாகும். அந்தவகையில் இத்தேவையை முடிந்தளவு நிறைவேற்றிக்கொடுக்க இளைஞர் காங்கிரஸ் தொழில் வங்கியொன்றை (Job Bank) முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் அமைந்துள்ள இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தில் நிறுவ திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் அரச துறையில் மாத்திரமன்றி தனியார் துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்ற துறைகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள இளைஞர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். இளைஞர் காங்கிரஸில் அங்கத்துவம் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

சமூகத்தின் முதுகெலும்பான இளைஞர்கள் சமூக சேவைகளில் ஈடுபடும் சந்தர்ப்பத்தை வழங்குவதற் காக இளைஞர் காங்கிரஸின் அனர்த்த முகாமைத்துவ சேவை இளைஞர் படையணி ஸ்தாபிக்கப்படவுள்ளது. இப்படையணி சமூகத்தில் அவ்வப்போது ஏற்படும் வெள்ளம் மற்றும் தொற்று நோய் போன்ற அனர்த்தங்களில் மக்களுக்கான தமது பணிகளை செய்வர். இவர்களுக்கான பயிற்சிகளை அனர்த்த நிவாரண சேவைகளில் ஈடுபடும் அரசாங்க நிறுவனங்களில் ஊடாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று இளைஞர்கள் எதிர்கொள்ளும் கல்வி மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வை முடிந்தளவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தீர்மானித்துள்ளது. இதன் முதற்படியாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் ஊடாக CIMA போன்ற உயர்கல்வியை மேற்கொண்டோரின் கல்விச் சான்றிதழ்கள் கட்டார், மற்றும் துபாய் தூதரகங்களில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அந்நாடுகளின் தூதுவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் முஸ்லிம் இளைஞர்கள் மாத்திரமன்றி இந்த நாட்டின் அனைத்து இளைஞர்களும் பயன் பெறுவர்.

சர்வதேச ரீதியில் எமது இளைஞர்களின் திறமையை வெளிப்படுத்தி ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் வெளிநாடுகளில் இயங்கும் இளைஞர் அமைப்புக்களுடன் இளைஞர் காங்கிரஸ் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பித்துள்ளன. இதன் மூலம் வெளிநாட்டு வளவாளர்களைக் கொண்டு எமது இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, எமது இளைஞர்களும் எதிர்காலத்தில் வெளிநாட்டு பயிற்சிநெறிகளில் கலந்து கொள்ளும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியுமாக இருக்கும்.

இவைபோன்ற செயற்பாடுகளின் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வழிகாட்டல் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- எம்.ஐ.ஸாஹிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையகம் தாருஸ்ஸலாமில் மாதமிருமுறை இஸ்லாமிய சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றுவருகின்றது. ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை ஜாமியா நளீமிய்யா விரிவுரையாளர் அஷ்ஷேய்க் பழீல் (நளீமி) ஆற்றிய "பொறுப்புதாரிகளின் பொறுப்புக்கள் ஓர் அமானிதம்" எனும் உரையைத் தழுவி எழுதப்பட்டது.

மனிதர்கள் அனைவரும் ஏதோவொரு வகையில் பொறுப்புக்களை சுமந்தவர்களாகவே உள்ளனர். அப்பொறுப்புக்கள் சிறியனவாகவோ பெரியனவாகவோ இருப்பினும் பொறுப்புக்கள் அனைத்தும் அமானிதமாகும். அப்பொறுப்புக்கள் அனைவரும் தங்களுடைய பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்றினார்களா என்ற கேள்விக்கு பதிலளிக்க வேண்டும் என்பதோடு, யாரும் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை இந்த ஹதீஸ் நினைவூட்டுகிறது.

ஒவ்வொருவரும் தங்களது பொறுப்புக்களின் அளவிற்கு ஏற்பவே விசாரிக்கப்படுவார்கள். பிரதேசபை உறுப்பினர் ஒருவருக்கும் அமைச்சர் ஒருவருக்குமான இடையிலான பொறுப்புக்களின் அளவு வித்தியாசப்படும் என்ற வகையில் அமைச்சர் ஒருவருக்கு உரிய கேள்வி கணக்குகள் அதிகமாகவே இருக்கும்.

பொறுப்புக்களைச் சுமந்தோர் கீழ்வரும் பண்புகளை



# பொறுப்புக்கள் பற்றி மறுமையில் விசாரணை உண்டு

**– அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். புழீல் (நளீமி) –**

தொடர்பில் மறுமையில் அல்லாஹ்விடம் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதுவே இஸ்லாம் எமக்கு கற்றுத்தரும் பாடமாகும்.

அந்தவகையில் தாய், தந்தை, ஆசான், அதிபர், பள்ளி நிருவாகி, மத்ரஸா நிருவாகி, பள்ளி ஹஜரத், இயக்க தலைவர் மற்றும் உறுப்பினர், பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை, மாகாண சபை,

**ஒக்டோபர் 22ஆம் திகதி "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் நிகழ்த்தப்பட்ட இஸ்லாமிய சொற்பொழிவின் சுருக்கம்**

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகிய அனைவருமே பொறுப்புதாரிகளாவர். அது மாத்திரமன்றி, துறைசார் நிபுணர்கள்இ கல்வியலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோரும் பொறுப்புதாரிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"நீங்கள் அனைவரும் பொறுப்புதாரிகள் உங்களுடைய பொறுப்புகள் பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள்" (புகாரி). பொறுப்புக்களை சுமந்த கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

* ஆழமான, உறுதியான இறை நம்பிக்கை கொண்டவராக இருத்தல்.
* இக்லாஸ் உடையவராக, இறை திருப்தியை மாத்திரம் இலக்காகக் கொண்டு செயற்படுபவராக இருத்தல்.
* தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பு தொடர்பில் தெளிந்த அறிவுடையவராக இருத்தல்.
* பொறுமை உடையவராக இருத்தல்.
* பரந்த மனப்பாங்கு கொண்டவராக இருத்தல்.
* தியாகம், அர்ப்பணம் கொண்டவராக இருத்தல்.
* கலந்தாலோசனை செய்யக் கூடியவராக இருத்தல்.
* அன்பு, கருணை, இரக்கம் கொண்டவராக இருத்தல்
* மனோ இச்சைக்கு கட்டுப்படாமல் மனவுறுதி கொண்டவராக இருத்தல்.
* பாவ காரியங்களில் இருந்து விலகி இருப்பவராக இருத்தல்
* தனிபட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும் முன்மாதிரியுடையவராக வாழ்தல்.
* அமானிதம் பேணுபவராக இருத்தல் வேண்டும்.

அல்லாஹ் மனிதர்களுக்கு வழங்கிய அனைத்து நிஹ்மத்துக்களும் அமானிதங்கள் ஆகும். அல்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான். "உங்களுக்கு வழங்கிய நிஹ்மத்துக்கள் பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்". ஒவ்வொருவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட நிஹ்மத்துக்கள் அளவிற்கு ஏற்பவே விசாரிக்கப் படுவார்கள். அந்த வகையில், உடல் உறுப்புக்கள், உடற்பலம், பணம், செல்வாக்கு, அதிகாரம், பதவி பட்டங்கள், பகுத்தறிவு மற்றும் ஈமான் போன்றவைகள் நிஹ்மத்துக்களாகவே கருதப்படுகின்றன.

பொறுப்புகளை சுமந்தவர்கள் தங்களது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற முடியாத போது அவர்கள் பொறுப்புகளை ஒப்படைத்தவர்களுக்கு துரோகம் செய்தவர்களாகவே கருதப்படுவர். அந்த வகையில் துரோகங்களாக கருதப்படும் சந்தர்ப்பங்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

* பொருத்தமற்றவர்கள் பதவிவகிப்பது
* உலக நோக்கங்களுக்காகப் பதவிவகிப்பது
* கவனயீனம், போடுபோக்கு
* பதவியினூடாக சுயநலன்களைத் தேடுவது
* முன்மாதிரியில்லாத வாழ்வு
* நேரமுகாமைத்துவமின்மை
* பொருத்தமற்றவர்களை பொறுப்புக்களுக்கு நியமிப்பது (உறவுக்காரர், நண்பர், பணம் தந்தவர், அச்சுறுத்துபவர், வாக்களித்தவர்)
* தன்னைப் போல் பிறரும் உருவாக வேண்டும் என்று சிந்திக்காமை.

அமானத் இல்லாதவனுக்கு ஈமான் இல்லை என முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த வகையில் பொறுப்புதாரிகளாகிய அனைவரும் தங்களது பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்றி சுவனத்தை பெற்றுக் கொள்வோம். இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய வரையறை...**

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பெருந் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் ஞாபகார்த்த நிகழ்வும் இளைஞர் மாநாடும் கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருதுவில் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்திருந்தார்.

இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள் அரசியலுக்குள் உள்வாங்கப்படுவது தொடர்பான விமர்சனங்கள் இருந்தாலும், தேர்தல் முறைமையும், வேட்புமனுத் தாக்கலின் போது பெண்களுக்கான இட ஒதுக்கீடு, அவர்களுக்கான ஆசனப் பங்கீடு என்பன தொடர்பாக அரசியல் திருத்தத்தின் ஊடாக அல்லது தேர்தல் சட்டத்தின் ஊடாக கட்டாயமாக்கப்படக் கூடிய நிலைமை காணப்படுவதால் பெண்களை அரசியல் பிரதிநிதிகளாகவும் மாற்ற வேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் இளைஞர்களை அரசியலுக்கு ஈர்த்தெடுப்பதை போன்று எதிர்காலத்தில் பெண்களையும் அரசியலில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளும் முஸ்லிம் காங்கிரஸால் முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் அவர் அங்கு தெரிவித்திருந்தார்.

இதற்கமைவாக புஷ்பா கொடித்துவக்கு என்ற சிங்களப் பெண்மணி கடந்த பிரதேச சபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் யடிநுவர பிரதேச சபையில் ஸ்ரீ.ல.மு.க. கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்திலும் காத்தான் குடி நகரசபையில் முஸ்லிம் பெண் பிரதிநிதித்துவம் இருந்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரையிலும் ஆண் வழிநடத்தல் சமூகக் கட்டமைப்பில் பெண்களின் பங்களிப்பும், வழிநடத்தலும் ஊக்குவிக்கப்படாவிட்டாலும் இன்றைய கால சூழ்நிலைகளின் மாற்றங்களுக்கேற்ப இஸ்லாமிய வரையறைக்குள் திருக்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ் சட்டம் ஆகியவற்றிற்கு இசைவான முறையில் முஸ்லிம் மாதர்களது அரசியல் பிரவேசம் மிகவும் அவசியம் என்றே கூறலாம்.

# நீர் வழங்கல், நீர்ப்பாசனம் பற்றி ஆராய்வு

ஹெத ஓயாவுக்கு குறுக்கே அணைக்கட்டு அமைத்து தனியான நீர்த்தேக்கமொன்றை உருவாக்கி பொத்துவில், லகுகல பிரதேசங்களில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற் காகவும், மேலதிகமாக இருபதாயிரம் முதல் இருபத்தையிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கான நீர்ப்பாச னத்தை ஏற்பாடு செய்வதற்கா கவும், அண்மையில் நடந்த கலந்துரையாடலின் போது அமைச் சர்களான ரவூப் ஹக்கீம், விஜித முனிசொய்சா, மத்தும பண்டார மற்றும் உயரதிகாரிகள் ஆகியோர் மத்தியில் நடந்த முக்கிய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மொனராகல, சியம்பலாண்டுவ பிரதேசங்களைச் சேர்ந்த பெரும் பான்மையான விவசாயிகள் தங்களது வயல்களுக்கு நீர் கிடைக்காமல் போகுமென்ற பீதி உணர்வை ஏற்படுத்துவது பற்றி அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

லகுகலப் பிரதேசத்தில் நிலத்தடி நீர்கூட பாவனைக்கு உதவாதாக இருப்பதால் இந்தத்திட்டம் நன்மை பயப்பதாக இருக்கும் என அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார்.

இவ்வாறிருக்க, மட்டக்களப்பு மாவட்டத்தின் உன்னிச்சைக் குளத்தின் அணைக்கட்டின் உயரத்தை இரண்டடி உயர்த்து வதன் மூலம் வாவியின் கொள் அளவை அதிகரித்து கிரான், ஓட்டமாவாடி, பாசிக்குடா போன்ற பிரதேசங்களுக்கு போதிய நீரை விநியோகிப்பதற்கு வாய்ப்பேற்படும் என அவர் தெரிவித்தார்.

றூகம், கித்துல் குளங்களை ஒன்றிணைத்து அமைக்கப்பட உத்தேசித்துள்ள கூடிய கொள் அளவைக் கொண்ட பாரிய நீர் வழங்கல் திட்டம் மிகவும் பயனுள்ளதென்று அமைச்சர் குறிப்பிட்டாலும், அதனை அமுலப்படுத்துவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் செல்லுமென்று உயரதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**முஸ்லிம் காங்கிரஸும்...**

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சுமார் 17 வருடங்கள் தொடர்ச்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் இணைந்து, புரட்டிப் போடுவதற்கான சாத்தியங்களை உருவாக்கியமை தொடக்கம், தோற்கடிக்கவே முடியாது என்று நம்பப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சியை, வெற்றிகொண்ட அணியுடன் கைகோர்த்தமை வரையில், முஸ்லிம் காங்கிரசின் "சாத்தியமானவற்றினை சாதிக்கும் அரசியல் கலை"க்கு ஏராளமான உதாரணங்களைச் சொல்ல முடியும்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்தி ருந்தமை தொடர்பில், ஏராள மான விமர்சனங்கள் இருந்த போதும், முஸ்லிம் காங்கிரஸ் தலைமையினைப் பொறுத்தளவில், மஹிந்த ஆட்சியில் இணைந் திருத்தல் என்கிற தீர்மானமானது "சாத்தியமானதைச் சாதிக்கும் கலை"யாகவே கருதப்பட்டது. அரசியலில் வலிமை மிகுந்த ஒருவரை எதிர்த்துக்கொண்டு, தன்னைக் காத்துக் கொள்வதிலுள்ள சாத்தியங்களை விடவும், அவருடன் இணைங்கிப் போவதுபோல் இருந்து, தற்காத்துக் கொள்வதே சாத்தியங்கள் நிறைந்தது என, முஸ்லிம் காங்கிரஸ் தலைமை உணர்ந்தமையினால்தான், மஹிந்த ஆட்சியில் முஸ்லிம் காங்கிரஸ் இருந்தது என்கிற வாதங்களும் உள்ளன.

நாடாளுமன்றில் எதிரணியில் இருந்து கொண்டுதான், முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் செயற்பாட்டினை ஆரம்பித்தது. இப்போது, ஆளுந்தரப்பில் இருக்கிறது. இணங்கிப் போக முடியாத தருணங்களில் எதிர் அரசியலையும், சார்ந்திருத்தலே சாதமாகனது என்கின்ற சமயங்களில் இணக்க அரசியலையும் செய்து வந்தமையினூடாக, சாத்தியங்களைச் சாதிக்கும் கலையாக, அரசியலை முஸ்லிம் காங்கிரஸ் செய்து பார்த்திருக்கிறது.

குறிப்பாக, அடுத்த சமூகத் துடனான அரசியல் உறவினைப் பேணுதல் தொடர்பில், அநேகமான தருணங்களில் இணங்கிப்போகும் அரசியலினையே முஸ்லிம் காங்கிரஸ் செய்து வந்திருக்கிறது என்பதையும் இங்கு பதிவு செய்தல் அவசியமாகிறது. இதனூ டாக, முஸ்லிம் காங்கிரஸ் நிறையவே சாதித்தும் உள்ளது.

உதாரணமாக, வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் நிறைவுற்றமையினையொட்டி, முஸ்லிம் காங்கிரஸ் சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை விசேட சொற்பொழிவாளராக முஸ்லிம் காங்கிரஸ் அழைத்திருந்தது. அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வடக்கு முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றியமையானது அப்பட்டமானதொரு இனச்சுத்திகரிப்பு என்று தெரிவித்ததோடு, அது தொடர்பில் தான் வெட்கித் தலைகுனிவதாகவும் கூறியிருந்தார்.

அதே மேடையில் தொடர்ந்து பேசிய சுமந்திரன்; 2012 ஆம் ஆண்டு, அரசாங்கம் சார்பாக ஐ.நா.சபையின் ஜெனீவா கூட்டத் தொடரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கலந்து கொண்டமையானது, தமிழ் சமூகத்தினை காட்டிக் கொடுக்கும் ஒரு செயலாகப் பார்க்கப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் பின்னர் ஊடகங்களில் சூடான பேசு பொருளாக மாறி, இன்று வரை தொடர்கின்றமை வேறொரு கதையாகும்.

தமிழ் சமூகத்தினைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அழைத்து வந்து, வடக்கு முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றியமையானது, அப்பட்டமான இனச்சுத்திகரிப்பு எனக் கூற வைப்பதற்கு காரணமாக அமைந்தது, தமிழ் சமூகத்துடனும், அந்த சமூகம் சார்ந்த அரசியல் கட்சிகளுடனும் முஸ்லிம் காங்கிரஸ் பேணிவரும் இணக்க அரசியலாகும்.

இதேவேளை, அந்த மேடையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைத்த விமர்சனம் தொடர்பில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எதுவித கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

சுமந்திரனின் கூற்றுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அந்த மேடையிலேயே பதிலளித்திருக்க வேண்டுமென கணிசமானோர் எதிர்பார்த்திருந்தபோதும், முஸ்லிம் காஸ்கிரஸ் தலைவர் அதைச் செய்யவில்லை.

தன்னால் அதிதி பேச்சாளராக அழைக்கப்பட்ட ஒருவரின் கருத்துக்களோடு முட்டி மோதுவதை நாகரீமாகக் கருதாத முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், அடுத்து வந்த நாட்களில் ஊடகங்களினூடாக, சுமந்திரனின் விமர்சனத்துக்குப் பதில் வழங்கியிருந்தார்.

அடுத்த சமூகங்களுடனான உறவினைப் பேணுதல் தொடர்பில், முஸ்லிம் காங்கிரஸ் தலைமை பேணிவரும் விட்டுக் கொடுப்புகளுக்கும், இணக்க அரசியலுக்கும் மேற்சொன்ன நிகழ்வு நல்லதொரு உதாரணமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளால், அதிகமான தருணங்களில் சாத்தியமானவற்றினை சாதிக்கும் கலையில் மு.காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது. கணிசமான தருணங்களில் தோல்விகளிலிருந்து தற்காத்துக்கொண்டுள்ளது. மிகச் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே, சாத்தியமானவற்றினைச் சாதிக்கும் கலையாக அரசியலைக் கையாள்வதில் முஸ்லிம் காங்கிரஸ் பின்னடைவை காண நேர்ந்தது.

தோல்விகளை விடவும் நல்ல ஆசான் எதுவும் இல்லை என்பார்கள். சாத்தியமானவற்றி னைச் சாதிக்கும் கலையில் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் வெற்றி பெறுவதற்கு, அதன் தவிர்க்க முடியாத தோல்விகளிலிருந்து கிடைத்த அனுபவங்கள் பெரிதும் உதவும் என்கிற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







உலக மலாய் அமைப்பின் தலைவரும், மலாக்காவின் முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய செனட்டரும், ஆளும் உம்னோ கட்சியின் பிரதித் தலைவருமான முஹம்மது அலி ருஸ்டாம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் அங்கமான மலாய் காங்கிரஸின் அலுவலகத்தை கட்சியின் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அழைப்பை ஏற்று “தாருஸ்ஸலாம்” தலைமையகத்தில் வியாழக்கிழமை மாலை திறந்துவைத்தபோது...





வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளி யேற்றப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியடை வதை முன்னிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்த நிகழ்வு அண்மையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் ஏற்பாட்டில் மர்ஹூம் அஷ்ரபின் நினைவு கூரும் நிகழ்வு சாய்ந்தமருதில் நடைபெற்றது.





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சஊதி அபிவிருத்தி நிதியத்தின் தவிசாளர் யூசுப் அல் பஸ்ஸாம் மற்றும் பிரதிநிதிகளை சந்தித்த போது...



இப்பத்திரிகை இல.51,வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02 இல் அமைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகத்திலிருந்து அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org